ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வந்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வந்து ॥

## திருவாலி - 1

‡வந்துனதடியேன் மனம் புகுந்தாய்⋆
    புகுந்ததற் பின் வணங்கும்⋆ என்
சிந்தனைக்கினியாய்⋆ திருவே! என் ஆருயிரே⋆
    அந்தளிர் அணியார் அசோகின்⋆ இளந்
தளிர்கள் கலந்து⋆ அவையெங்கும்
    செந்தழல் புரையும்⋆ திருவாலி அம்மானே! (1)

நீலத் தட வரை⋆ மா மணி நிகழக்
    கிடந்தது போல்⋆ அரவணை
வேலைத்தலைக் கிடந்தாய்⋆ அடியேன் மனத்திருந்தாய்⋆
    சோலைத் தலைக் கண மா மயில் நடம் ஆட⋆
மழை முகில் போன்றெழுந்து⋆ எங்கும்
    ஆலைப் புகை கமழும்⋆ அணியாலி அம்மானே (2)

நென்னல் போய் வரும் என்றென்றெண்ணி
    இராமை⋆ என் மனத்தே புகுந்தது⋆
இம்மைக்கென்றிருந்தேன்⋆ எறி நீர் வளஞ்செறுவில்⋆
    செந்நெல் கூழை வரம்பொரீ இ⋆ அரிவார்
முகத்தெழு வாளை போய்⋆ கரும்-
    பந்நற்காடணையும்⋆ அணியாலி அம்மானே (3)

மின்னில் மன்னு நுடங்கிடை⋆ மடவார் தம்
    சிந்தை மறந்து வந்து⋆ நின்
மன்னு சேவடிக்கே⋆ மறவாமை வைத்தாயால்⋆
    புன்னை மன்னு செருந்தி⋆ வண் பொழில்
வாய் அகன் பணைகள் கலந்து⋆ எங்கும்
    அன்னம் மன்னும் வயல்⋆ அணியாலி அம்மானே (4)

www.prapatti.com

நீடு பன்மலர் மாலையிட்டு⋆ நின்
    இணையடி தொழுதேத்தும்⋆ என் மனம்
வாட நீ நினையேல்⋆ மரம் எய்த மாமுனிவா!⋆
    பாடல் இன் ஒலி சங்கின் ஓசை
பரந்து⋆ பல் பணையால் மலிந்து⋆ எங்கும்
    ஆடல் ஓசையறா⋆ அணியாலி அம்மானே (5)

கந்த மாமலர் எட்டும் இட்டு⋆ நின்
    காமர் சேவடி கை தொழுதெழும்⋆
புந்தியேன் மனத்தே⋆ புகுந்தாயைப் போகலொட்டேன்⋆
    சந்தி வேள்வி சடங்கு நான்மறை⋆
ஓதி ஓதுவித்தாதியாய் வரும்⋆
    அந்தணாளர் அறா⋆ அணியாலி அம்மானே (6)

உலவு திரைக் கடல் பள்ளி கொண்டு வந்து⋆
    உன் அடியேன் மனம் புகுந்த⋆ அப்-
புலவ! புண்ணியனே!⋆ புகுந்தாயைப் போகலொட்டேன்⋆
    நிலவு மலர்ப் புன்னை நாழல் நீழல்⋆ தண்
தாமரை மலரின் மிசை⋆ மலி
    அலவன் கண் படுக்கும்⋆ அணியாலி அம்மானே (7)

சங்கு தங்கு தடங்கடல்⋆ கடல்
    மல்லையுள் கிடந்தாய்⋆ அருள் புரிந்-
திங்கென்னுள் புகுந்தாய்⋆ இனிப் போயினால் அறையோ!⋆
    கொங்கு செண்பக மல்லிகை மலர்
புல்கி⋆ இன்னிள வண்டு போய்⋆ இளந்
    தெங்கின் தாதளையும்⋆ திருவாலி அம்மானே (8)

ஓதி ஆயிர நாமமும் பணிந்-
    தேத்தி⋆ நின் அடைந்தேற்கு⋆ ஒரு பொருள்
வேதியா! அரையா!⋆ உரையாய் ஒரு மாற்றம் எந்தாய்!⋆
    நீதி ஆகிய வேத மா முனி-
யாளர்⋆ தோற்றம் உரைத்து⋆ மற்றவர்க்-
    காதியாய் இருந்தாய்!⋆ அணியாலிலம்மானே (9)

‡புல்லி வண்டறையும் பொழில் புடை சூழ்⋆
தென்னாலி இருந்த மாயனை⋆
கல்லின் மன்னு திண் தோள்⋆ கலியன் ஒலிசெய்த⋆
நல்ல இன்னிசை மாலை⋆ நாலும் ஓர்
ஐந்தும் ஒன்றும் நவின்று தாம்⋆ உடன்
வல்லராய் உரைப்பார்க்கு⋆ இடம் ஆகும் வான் உலகே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com